ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1475

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.10.2023**, வெள்ளிக்கிழமை

1. தர்மனே ஞானத்தலைவனே
தவராஜனாக வந்த ஆறுமுக அரங்கனே
பெருமைகொண்டு இந்த உலகமெல்லாம்
பிரணவ சக்தி நிரப்பி அன்பர்கட்கு
2. அன்பர்கட்கு ஞானவரம் தருகின்ற
அரங்கனே ஞான தேசிகனே
இன்பமுற சுப்ரமணியர் யானும் இனிதே
இயம்பிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 26 ம் நாள், 13.10.2023, வெள்ளிக்கிழமை)

3. ஆசியதும் அரங்கன் பலம் கூடி நிற்க
அகிலத்தில் அன்பர்கள் கூட்டம்
நன்மை கருதி ஓங்காரக்குடில் நோக்கி
நல்கினால் போதுமப்பா உலகமாற்றம்
4. மாற்றமதும் தானாக நடந்தேறும்
மக்களிடை மனபலம் கூடி இனிதே
ஆற்றல்பட சன்மார்க்க நெறி வழி
ஆளுமையையே மாற்றும் அற்புதம் நடக்கக்கூடும்
5. கூடவே அரங்கன் மார்க்கம் குவலயத்தை
குறைவிலா சுற்றி வளைத்து அன்பர்களிடை
நிறைவான மன பக்குவம் ஆற்றல்கூட்டி
நீதிநெறிமாறா வாழும் வகையை
6. வகைதனை வாழ்க்கை முறையை
வல்லமைபட உருவாக்கி உலகமெல்லாம்
பெருமைகொண்ட ஞானவான்கள் தலைமை
பிரணவ சக்தியாக நிரம்ப இனிதே

7. இனிதே உலகத்தில் அற்புதத்தை
இலகுவாய் நடத்தி ஞான ஆட்சி
முருகப்பெருமான் யான் வெளிப்படும் வண்ணம்
முழுமைகொண்ட காலமாக மாற்றம் கனிந்து இனிதே

8. இனிதே உலகத்தில் பேரற்புதம்
இயம்பிடுவேன் அரங்கனால் நடந்தேறும்
கனிவேலவன் என்னாசியோடு
கருணைபட உலகத்தில் அற்புதம் நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–